19th January 1965]

MR. SPEAKER : In accordance with the regulations framed by me for the holding of elections according to the principle of proportional representation by means of the single transferable vote, I fix 11 a.m. on Thursday, the 21st January 1965 as the time within which the nomination papers of the candidates for election to the Committee on Estimates should reach the Secretary. Nomination forms can be had on application to the Secretary.

The nomination papers will be taken up for scrutiny at 1 p.m. on 21st January 1965. I also fix 3 p.m. on 22nd January 1965, as the last hour and date for the withdrawal of candidature.

If the number of candidates nominated exceeds the number of seat to be filled, viz., ONE, a poll will be taken on Saturday, the 23rd January 1965 between the hours of 9 a.m. and 1 p.m.

VII.—PRIVILEGE MATTER.

PROPRIETY OF MAKING COMMENTS TO THE PRESS ON THE GOVERNOR'S ADDRESS.

கனம் திரு. எம் பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, துணை மதிப்பீடுகளை இந்த மன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்பு தங்கள் அனுமதியின் பேரில் நான் ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். அது இந்த மன்றத்தின் உரிமையைப் பற்றியது. அதைத் தங்களுடைய பரிசீலனைக்கும், முடிவிற்கும் விட்டு விடுகிறேன். நேற்று கவர்னர் அவர்கள் உரை நிகழ்த்தினார்கள். அதன் பேரில் கனம் உறுப்பினர்கள் அபிப்பிராயங்கள் தெரிவிக்க, விவாதிக்க இன்றிலிருந்து நான்கு நாட்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. கனம் உறுப்பினர்கள் அபிப்பிராயம் தெரிவிப்பார்கள். ஆனால் நேற்று கவர்னர் அவர்கள் உரை நிகழ்த்தியவுடனே சில கனம் உறுப்பினர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உட்பட அபிப்பிராயங்கள் தெரிவித்து பேப்பர்களில் வந்திருக்கின்றன. அது முறை அல்ல என்பது என் கருத்து. 10-30 a.m.
அம்மாதிரி கூறுவது சரியல்ல என்பதுதான் என்னுடைய கருத்து. அது மட்டும் அல்ல, ஓரளவுக்கு இந்த மன்றத்திற்குப் பங்கம் ஏற்படக்கூடிய வகையில் அது இருக்கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம். இதை நான் அங்கத்தினர்களைக் குற்றம் சாட்டுவதற்காகக் சொல்லவில்லை. குற்றஞ்சாட்டுவது என்பது என் நோக்கமும் அல்ல. அந்த முறையில் எதிர்க்கட்சிகள் தான் நடந்து கொள்ள முடியும். ஆனால் இம்மாதிரி கவர்னர் உரையின் மீது, உடனடியாகக் கூறுவது நமது சபையின் சம்பிரதாயங்களுக்குச் சரியாக இல்லை என்பதைத்தான் நான் தங்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். இதைத் தாங்கள் பரிசீலனை செய்து நல்லதொரு முடிவு எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் தலைவர் அவர்களே, நேற்று இந்த மன்றத்தில் மேன்மைதங்கிய கவர்னர் அவர்கள் உரை ஆற்றினார்கள். இவ்விதம் ஆற்றப்பட்ட உரை இந்த மன்ற உறுப்

பினர்களுக்கும் இந்த நாட்டு மக்களுக்கும் தெரிவிக்கக்கூடிய செய்தியாகத்தான் எடுத்துக் கொள்ளப்படும். சாதாரணமாக எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் வரவு செலவுத்திட்டம் போன்றவைகள் வந்தவுடன், பத்திரிகை நிருபர்கள் எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்களிடமும், மற்றுமுள்ள முக்கியமானவர் களிடமும் அபிப்பிராயத்தைக் கேட்பது ஒரு மரபாக இருந்து வருகிறது. இந்த முறை, இந்தியப் பாராளு மன்றத்திலும், மற்ற சட்டமன்றங்களிலும், கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு ஆண்டும் வரவு செலவுத் திட்டம் வெளி யானவுடன் அதைப்பற்றிய கருத்தை எதிக்கட்சியைச் சார்ந்த வர்கள் மட்டுமல்ல, ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களும் கூட பத்திரிகை நிருபர்களிடம், அவர்கள் கேட்கும் போது, சொல்வது வழக்கமாக இருந்து வருகிறது. அந்த மரபில் நேற்றைய தினம் இங்கும் கனம் உறுப்பினர்கள் தங்கள் கருத்தைச் சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டதே தவிர, இந்த மன்றத்திற்கோ அல்லது வேறு எவருக்கோ பங்கம் ஏற்படுகின்ற முறையில் சொன்னதாக எடுத்துக்கொள்வது சரியல்ல. இந்த அவைக்கு இருக்கின்ற ஒழுங்குக்கு எந்தவிதத்திலும் கேடு வரக்கூடாது என்பதில் எல்லோருக்கும் அக்கறை இருக்கிறது. இதைப் பற்றிய முடிவைத் தாங்கள்தான் தெரிவிக்கவேண்டியிருக்கிறது என்றிருந் தாலும்கூட இங்கு மட்டும் அல்ல பிற இடங்களிலும் இருக்கின்ற மரபிற்கும் ஏற்றவாறு தான் இங்கும் கருத்துக்கள் தெரிவிக்கப் பட்டன. இந்த மரபு இருக்கவேண்டுமா வேண்டாமா என்பது தாங்கள் அளிக்கவிருக்கின்ற தீர்ப்பைப் பொறுத்திருக்கிறது. ஆனால் இதுவரையிலும் இருக்கின்ற மரபின் அடிப்படையில்தான் இங்கு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்கள் இந்த சபையில் இருப்பவர்களிலே மிக முதிர்ந்தவர், அனுபவத்திலும் வயதிலும், என்று நினைக்கிறேன். பார்லிமென்டரி சம்பிரதாயத்திலும் அவர்களுக்கு ஏற்பட்டிருக் கின்ற அனுபவம் இங்கு யாருக்கும் இராது என்றே நினைக்கின் றேன். ஆனால் எதிர்க்கட்சியில் இருந்து அனுபவம் கிடையாது என்பதை நான் சொல்ல முடியும். கவர்னர் உரைமீதும், வரவு செலவுத் திட்டத்தின் மீதும் கருத்துக்கள் தெரிவிப்பது, இங்கு மட்டும் அல்ல, எல்லா நாடுகளிலும் பின்பற்றக்கூடிய ஒரு முறை தான். அந்த மரபில்தான் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. இதைக் குற்றஞ்சாட்டுவதாகக் கொண்டு வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். அப்படிக் குற்றஞ்சாட்டுவதாகக் கொண்டுவர வில்லை என்று கனம் முதலமைச்சர் அவர்களே சொல்லி, சபா நாயகர் அவர்களைச் சங்கடமான ஒரு நிலைக்குக் கொண்டு வந்தார் கள். . .

கனம் சபாநாயகர்: எனக்கு இதில் எந்த விதமான சங்கடமும் இல்லை. இது போன்ற உன்னதமான கருத்துக்களை எல்லாம் கேட் பதற்குரிய சந்தர்ப்பம் கிடைத்தது என்றுதான் சந்தோஷப் படுகிறேன்.

19th January 1965]

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்தப் பிரச்னையை பிரிவிலேஜ் கமிட்டிக்குக் கொண்டு வந்திருந்தால்கூட நாம் வரவேற்றிருக்க லாம். இதைப் பற்றி நன்ருகப் பரிசீலனை செய்வதற்குரிய வாய்ப்பு கிடைத்திருக்கும். இம்மாதிரி உரைகள் வருகின்ற நேரத்தில் எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் தங்கள் கருத்துக்களை சொல்கின்ற வழக்கத்தை ஊர்ஜிதம் செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கும். இம்மாதிரிப்பட்ட தீர்மானம் நமக்கு ஓர் உதவிகரமாகவும் இருந் திருக்கும். கவர்னர் அவர்களின் உரை என்பதும், அதில் சொல்லக் கூடிய செய்திகள் எல்லாம் முதலமைச்சர் அவர்களையும் இந்த மந்திரிசபையையும் சார்ந்ததாகும். ஆகவே, இதைப்பற்றி கருத்துக்களை இந்த சபையிலுள்ள உறுப்பினர்கள் ஒரு முறை அல்ல நூறு முறை கூட சொல்வதற்கு உரிமை இருக்கிறது என்பதை நான் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* **திரு. சா. கணேசன்** : சபாநாயகர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்த விஷயத்தை நான் புரிந்து கொள்கிறேன். சபையில் என்ன விதமான மரபு இருக்கவேண்டும் என்பதைப்பற்றி நிர்ணயம் செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் அவர்கள் இதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள் என்று நான் நினைக்கின்றேன்; அதற்கு மிகவும் நன்றி. ஆனால் கவர்னர் அவர்களின் உரையானது எல் லோருக்கும் பொதுவாகச் சொல்லுகின்ற அரசாங்கத்தின் கொள்கை விளக்கமாகும். இதை இந்தச் சபையில் நிகழ்த்துவதற்கு முன்பு யாரும் கருத்துச் சொல்லவில்லை. அதை எதிர்பார்த்து வேண்டுமென்ருல் கருத்துக்களைச் சொல்லியிருக்கலாம், சொல்லி யிருக்கவும் முடியும். ஆனால் அவ்விதம் யாரும் சொல்லவில்லை. அவர்கள் இந்த சபையில் உரை நிகழ்த்திய பின்னால், பத்திரிகைக் காரர்கள் எதிர்க்கட்சிக்காரர்களைத் தங்கள் கருத்துக்களைக் கூறும் படி கேட்பது வழக்கம். அந்த முறையில்தான் கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. பத்திரிக்கைக்காரர்கள் எங்குமே இப்படிக் கேட்பது வழக்கமே. அந்த முறையில்தான் நேற்றைய தினமும் கேட்டார்கள்; பின்னும் கேட்டுக்கொண்டிருப்பார்கள். இது ஒரு சம்பிரதாயமாக இருந்து வருகிறது. அந்த நேரத்தில் உடனடியாக என்னென்ன கருத்துக்கள் தோன்றுகின்றனவோ அவைகளை ஒன்றி ரண்டு வார்த்தைகளில் சுருக்கமாகச் சொல்வது வழக்கம். இது சரியானதும் நியாயமானதும்கூட என்றுதான் நான் சொல்வேன். இந்த முறை தொடர்ந்து இருப்பதுதான் நம் முடைய பார்லிமெண்டரி ஜனநாயகத்திற்கு வளமுடையதாக இருக்கும், நன்மை பயப்பதாக அமையும் என்பது மட்டுமல்ல, இதனால் யாருக்கும் எந்த சபைக்கும் எந்தவிதமான குறை பாடோ அல்லது தீமையோ ஏற்பட மாட்டாது என்பதைத் தங்கள் கவனத்திற்குச் சமர்ப்பிக்க விரும்புகிறேன். தனிப்பட்ட வர்களும், பத்திரிக்கைக்காரர்களும் அபிப்பிராயம் சொல்ல வாய்ப் பிருக்கும்போது கட்சித் தலைவர்கள் கூறக்கூடாது என்று சொன்னால் அது சட்டசபையில் இருப்பதற்கு விதித்த தண்டனை யைப் போலவே அமையும் என்பதையும் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், கனம் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள், இவர்கள் எல்லோரும் தங்கள் கருத்தைத் தெரிவித்தார்கள். கவர்னர் அவர்களுடைய உரைக்கும், வரவு செலவுத் திட்டத்திற்கும் வித்தியாசம் உண்டு என்பதைக் கனம் உறுப்பினர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். வரவு செலவுத் திட்டத்தில் இன்ன இன்ன வரி போடுகின்றோம் என்பதைப்பற்றிச் சொல்லப்படுகிற நேரத்தில் அதைப்பற்றிக் கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. கவர்னர் உரை அப்படியல்ல. பிரிட்டிஷ் பார்லிமெண்டரி சம்பிரதாயப்படி ராணி அவர்கள் உரை நிகழ்த்திய உடன் இவ்வாறு கருத்து தெரிவிப்பது வழக்கமாக இருந்து வருகிறதா என்பதை நாம் இனிமேல் தான் பார்க்கவேண்டும். இவ்விதம் கருத்து தெரிவிப்பது அங்கேயும் உண்டு 'மேஸ் பார்லிமெண்டரி' புத்தகங்கள் மூலமாக நமக்கு தெரியவந்தாலும் கூட, அதை விட நமக்கு மேலான ஒரு மரபை நாம் ஏற்படுத்திக்கொள்ளலாம் என்ற கருத்துத்தான் நான் கூறுவேன். அவ்விதம் அங்கு ராணி அவர்களின் உரை மீது கருத்துத் தெரிவிக்கும் வழக்கம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் அவ்விதம் இருப்பதாக சொல்கிறார்கள். அவர்களுக்கு அதிக அனுபவம் இருக்கிறது. ராணி அம்மையார் உரையாற்றியதும் இவ்விதம் கருத்து தெரிவிப்பது என்ற வழக்கம் இருக்கிறதா என்பதை நாம் பார்க்க வேண்டும். யார் உரை நிகழ்த்தினாலும் இவ்விதம் அதைப்பற்றி கருத்து தெரிவிப்பது நல்லதா என்பதைத்தான் நாம் பார்க்க வேண்டும். இந்த சபையைப் பொறுத்தவரையில் கவர்னர் அவர்களுடைய உரையைப்பற்றி நாம் நான்கு நாட்கள் விவாதிக்கப் போகிறோம். அதில் கனம் உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்கள் எல்லாவற்றையும் தெரிவிக்கலாம். இதற்காகவே நான்கு நாட்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியில் இதைப் பற்றி நன்கு ஆலோசித்து கூடுதல் நாட்கள் வேண்டும் என்ற கருத்தின்படி நான்கு நாட்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கட்சி என்ற முறையில் வேண்டுமென்றால் கருத்துக்கள் தெரிவிக்கலாம் அதைப் பற்றி யாருக்கும் ஆட்சேபணை இல்லை. ஆனால் இந்த சபையில் இருக்கின்ற கனம் உறுப்பினர்கள் எடுத்தவுடனேயே கருத்துக்களை வெளியிடுவது சரியா என்பதைப் பற்றித்தான் தாங்கள் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மற்றவர்கள் சொல்லுகிறார்கள் அதனால் நாமும் சொல்லுகிறோம் என்றிருக்கவேண்டிய தேவையில்லை. நாமாகவே நமக்கு நல்லதொரு சிறந்த சம்பிரதாயத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம், அதில் எந்தவிதமான தவறும் இராது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் ஆற்றிய உரைக்குப் பிறகு, அன்றைய தினமே வெளியிடப்படுகின்ற பத்திரிகைகள் எல்லாம் அவர்களுடைய கருத்துக்களை வெளியிடுகிறார்கள். அதே போன்றுதான் கவர்னர்

அவர்கள் உரையாற்றுகின்ற தினத்தில் இந்த சபையிலுள்ள உறுப்பினர்கள் யாரேனும் அன்றைய தினமே மாலை ஏதாவது பொதுக் கூட்டத்தில் பேசுவதாக இருந்தாலும் நிச்சயமாக இதைப் பற்றி ஏதாவது கருத்துக்களை தெரிவிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இதனால் ஏதோ உரிமை பறி போகிறது என்று சொல்லிவிட முடியாது. ஆகவே இவ்வாறு கருத்து தெரிவிப்பத்தில் எந்த விதமான தவறும் இல்லை என்பதை தங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

MR. SPEAKER: It is a very interesting and important point in the growth of democracy. Of course, there are certain points, which ought not to be let out. They have to be revealed only in the House. The Hon. Chief Minister has raised that point. This point had not come before me till now. I shall go through the speeches of the hon. Members and the Hon. Chief Minister. I will get information from various authorities, examine the question and inform this House on a subsequent date.

VIII.—THIRD SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1964-65—PRESENTATION.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சபாநாயகர் அவர்களே, 1964-65-ம் ஆண்டின் மூன்றாவது துணை மதிப்பீடுகளை சபை முன் சமர்ப்பிக்கிறேன். இது பற்றி, பல்வேறு மானியக் கோரிக்கைகளை விளக்கும் விவர அறிக்கை ஒன்று மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது. இத் துணை மானியக் கோரிக்கைகளின் மொத்த மதிப்பு சுமார் 38.4 கோடி ரூபாய் ஆகும். இதில் சுமார் 2.5 கோடி ரூபாய் ரெவின்யூக் கணக்கிலும், 25.8 கோடி ரூபாய் மூலதனக் கணக்கிலும் அடங்கும். எஞ்சியுள்ள 10.1 கோடி ரூபாய் கடன் கணக்கில் அடங்கும். இதில் 7 கோடி ரூபாய் இந்திய அரசாங்கத்திடமிருந்து பெற்ற வழிவகை முன் பணங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டிய தொகையைக் குறிக்கிறது.

இத் துணை மதிப்பீடுகளில் பெரும்பாலானவை கடந்த மூன்று மாதங்களில் அரசாங்கம் அனுமதித்த "புதுப் பணித்" திட்டங்கள் பற்றியவையாகும். அத்துடன் இதுவரை பெற்றுள்ள நிதி ஒதுக்கத்தைவிட அதிகமாகச் செலவாகக்கூடிய சில மானியங்களின் கீழ் கூடுதலான நிதி ஒதுக்கம் கேட்கவும் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டுள்ளோம்.

இத் துணை மதிப்பீடுகளில் உள்ள மிகப் பெரிய செலவினம் உணவுத் தானியக் கொள்முதல் செலவைப் பற்றியதாகும். விலைக் கட்டுப்பாட்டின் விளைவாக உணவுத் தானியங்களில் தனியார் வர்த்தகம் நின்றதன் விளைவாக அக்டோபர் மாதத்தில் தற்காலிகமாக உணவுத் தானிய வினியோக நிலைமையில் சிரமம் ஏற்பட்டது. அப்போது உணவுத் தானியங்கள் தொடர்ந்து கிடைக்கச் செய்